கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.

அ.வ.எண். 380/2010

நாள். 30.01.2025

2025ம் ஆண்டு ஜனவரி 30 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) செல்வி. P. அஞ்சலிதேவி, உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

=====================================================================

| | |
|---|---|
| பெயர் = ராமநாதன் | தகப்பனார் பெயர்= |
| கிராமம் = | தாலுக்கா = |
| சாதி = | சமயம் = |
| தொழில் = | வயது = |

=====================================================================

**PW 2 மு.வி**

நான் இவ்வழக்கின் வாதியின் அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு நான் கையொப்பம் செய்துள்ளேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன். அதனை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

27.11.2024 ல் எனக்கு வாதி எழுதிக்கொடுத்த சிறப்பு பொது அதிகார ஆவணம் அசல் வா.சா.ஆ.9, 14.07.2000 தேதியிட்ட லதா அவர்களுக்கு பாண்டியன் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.10, 14.07.2000 தேதியிட்ட லதா பெயரில் ஏற்பட்ட மூலக்கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11, புல எண்.22 யை பொறுத்த புல வரைபடம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.12 ஆகும்.

வா.சா.ஆ.9 முதல் வா.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது.

மேலும் சான்றவாணங்கள் குறியீடு செய்ய 07.02.2025 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.